**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 201/2025**
**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. விஜயகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. காளியப்பன்** | **Calling** | : | **கார் வாங்கி விற்பனை** |
| **Village** | : | **செட்டிநாயக்கன்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **38** |
| | | | **Dated** | : | **09.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரிகள் ஆஜர். ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. விஜயகுமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார் வாங்கி விற்பனை செய்யும் வேலை செய்து வருகிறேன். 11.04.2022 ம் தேதி மாலை 06.30 மணிபோல் கரூர் பைபாஸில் உள்ள பூதிப்புரம் பிரிவு அருகே நானும், ஆறுமுகம் என்பவரும் நின்று கொண்டு இருந்தபோது, வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி கருப்பையா என்பவர் TVS XL இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டு இருந்தார். கரூர் – திண்டுக்கல் நோக்கி வந்து கொண்டிருந்த டாடா இண்டிகா வெள்ளை நிற கார் கருப்பையா என்பவர் மீது மோதியது. நானும், ஆறுமுகம் என்பவரும் அங்கு நின்று சாலையைப் பார்த்து பேசிக் கொண்டு இருந்தபோது, மேற்படி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில்

XL வாகனம் மெதுவாக வந்து கொண்டு இருந்தபோது, பின்னால் வந்த இண்டிகா கார் வேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டது. நானும், ஆறுமுகமும் சென்று பார்த்தபோது, கருப்பையாவிற்கு கை, கால், தலையில் காயம் ஏற்பட்டு இருந்தது. என்னுடன் இருந்த ஆறுமுகம் கருப்பையாவின் மகன் சூரியாவிற்கு போன் மூலமாக விபத்தை பற்றி தகவல் சொன்னார். காயம்பட்டவரை 108 ஆம்புலனஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நாங்களும் இருசக்கர வாகனத்தில் பின்னால் மருத்துவமனைக்கு சென்றோம். விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் தெரியும், ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய நபர். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—**</u>

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா. 1 சூரியபிரகாஷ் எனது சித்தப்பா மகன். ஆறுமுகம் என்பவர் எனது நண்பர், அவரை 10 வருடங்களாகத் தெரியும். என்னுடைய சித்தப்பா பெயர் கருப்பையா. கருப்பையாவிற்கு எத்தனை வயது இருக்கும் என்று கேட்டால், சுமார் 55 வயது இருக்கும். சம்பவ இடத்தைச் சுற்றி நிறைய கடைகள் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடம் ஆட்கள் சென்று வரும் நெரிசலான பாதை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மேற்கு பக்கம் இருந்து கிழக்கு பக்கமாக செல்வதற்கு வழித்தடங்கள் இருக்கிறது என்றால் சரிதான். நானும், ஆறுமுகமும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கும், விபத்து நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 20 மீட்டர் தூரம் இருக்கும். நான் வடக்கு திசையைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தேன். "டம்" என்று சத்தம் கேட்டுத்தான் நான் திரும்பிப் பார்த்தேன் என்றால் சரியல்ல, நான் பார்த்துக் கொண்டிருந்தபோது தான் விபத்து நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற

இடத்தில் சுமார் 5, 6 நபர்கள் இருந்தார்கள். நான் பார்க்கும் போது இருசக்கர வாகனம் ரோட்டில் கிடந்தது. கார் மேற்படி இருசக்கர வாகனத்தை மோதியவாறு ரோட்டில் நின்று கொண்டிருந்தது. சம்பவ இடத்திற்கு காயம்பட்ட நபரின் மகன் வந்தாரா என்றால் இல்லை. கருப்பையாவிற்கு ஏற்கனவே ஒரு விபத்து ஏற்பட்டு, அதனால் காயங்கள் ஏற்பட்டு அது சரியாகிவிட்டது. சம்பவ இடத்திற்கு போலீசார் சம்பவம் நடந்து 20 நிமிடங்களுக்குள் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துவிட்டு நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அதன்பிறகு போலீசார் எங்களை விசாரிக்கவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அசா. 1 என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அசா. 1 வயதானவர் என்பதால், அவர் சாலையை சரியாக கவனிக்காமல் தானாகவே கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் சொல்லித்தான் ஆஜர் எதிரியைத் தெரியும் என்றால், சாட்சி முதலில் ஆம் என்று சொல்கிறார். பின்னர் நீதிமன்றம் மேற்படி கேள்வியை விளக்கிய பிறகு விபத்து சமயத்தில் எதிரியை பார்த்ததாகச் சொல்கிறார். இந்த விபத்து சம்மந்தமாக இந்த எதிரியை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 09.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.09 15:19:33 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.